வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 15.05.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 129 பக்கங்கள் : 08




யாழ்.போதனா வைத்தியசாலையின்

## எரிந்த மருந்து களஞ்சியத்தை பார்வையிட்ட கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், மே. 15

யாழ்ப்பாண வைத்தியசாலையில் தீ விபத்தினால் எரிந்துபோன மருந்து களஞ்சியசாலையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சென்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வைத்தியசாலை சேவைகள் தொடர்பில் பணிப்பாளர் மருத்துவர் 07



# கல்வி நிகழ்வுகளுக்கு வரி குறைப்பு வழங்க மறுக்கிறார் வடக்கு ஆளுநர்

### இராணுவ நிகழ்வுகளுக்கு வரி விலக்கு யாழ். மாநகர சபையில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே. 15

**யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பாடசாலை நிகழ்வுகளுக்கு யாழ்.மாநகர வரிக்குறைப்பை வழங்குவதற்கு மாநகர சபை தீர்மானம் நிறைவேற்றியபோதும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் அதனை வழங்க முடியாது என நிராகரித்துள்ளார் என நேற்று யாழ்.மாநகர சபை அமர்வில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.**

நேற்று வியாழக்கிழமை யாழ். மாநகர சபை மாதாந்த அமர்வு முதல்வர் மதிவதனி தலைமையில் இடம்பெற்றபோது இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அமர்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர், யாழ். மத்திய கல்லூரி மற்றும் பரியோவான் கல்லூரி ஆகியன பங்கு பற்றிய பெருந்துடுப்பாட்டப் போட்டி, யாழ்.இந்துக் கல்லூரி ஏற்பாடு செய்த இசை நிகழ்வு, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஏற்பாடு செய்த இசை நிகழ்ச்சி ஆகியவற்றுக்கு மாநகர சபையால் அறவிடப்படும் வரியை குறைக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக்ச் சபையில் வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றன.

இதன்போது கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்,

வரியைக் குறைப்பதற்கு சபையில் தீர்மானம் எடுக்கப்பட்ட நிலையில் வடக்கு மாகாண ஆளுநர், அவ்வாறு வரி விலக்கு வழங்கமுடியாது. சபையின் வருமானத்தை குறைப்பதை அனுமதிக்கமுடியாது என அனுமதி தரவில்லை.

ஆனால் யாழ்.துரையப்பா 07

## திருவள்ளுவர் கலாசார நிலையத்தின் நிர்வகிப்பு யாழ்.மாநகருக்கு உரியதே!

### அதை வேறு எவரும் ஆளுகை செய்யமுடியாது நேற்றைய சபை அமர்வில் ஏகமனதாக தீர்மானம்

யாழ்ப்பாணம், மே. 15

யாழ்.மாநகர சபைக்கான முதலீடுகளும் சொந்துக்களும் மாநகர சபைக்கே உரித்தானதாக இருக்க வேண்டுமே தவிர அதை வேறெவரும் ஆளுகை செய்ய முடியாது. அதன் அடிப்படையில் யாழ். திருவள்ளுவர் கலாசார நிலையத்தின் நிர்வகிப்பும் யாழ்.மாநகரிடமே இருக்கவேண்டும் என முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.மாநகரின் மாதாந்த அமர்வு நேற்று முதல்வர் திருமதி மதிவதனி தலைமையில். 07

கபில சந்திரசேனவின் மரணம்

## சி.சி.ரி.வி. காட்சி பதிவாகாமையினால் விசாரணையில் தொடர் மர்மம் நீடிப்பு

கொழும்பு, மே. 15

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவின் சந்தேகத்திற்கிடமான மரணம் தொடர்பான வழக்கு விசாரணையில், அவர் உயிரிழந்த இடத்தில் இருந்த சி.சி.ரி.வி. கமெராக்கள் இயங்கிய போதிலும், காட்சிகள் எவையும் பதிவாகவில்லை என கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் பசன் அமரசேன 07

## குடிவரவு அதிகாரி கைது!

கொழும்பு, மே. 15

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் மென்பொருள் ஒன்றை நிறுவும்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பாக, அந்தத் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் கட்டுப்பாட்டாளரான கே. ஹேரத் என்பவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட 07

## யாழில் மின்னல் தாக்கி இளைஞன் உயிரிழப்பு!

### சுழிபுரம் பகுதியில் துயரம்

யாழ்ப்பாணம், மே. 15

யாழ்ப்பாணத்தில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த இளைஞர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

சுழிபுரம் கிழக்கை சேர்ந்த அண்ணாத்துரை வின்சன் (வயது-22) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் மீட்கப்பட்டு சங்கானை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 07

## தேசிய மாவீரர் நினைவு தினம் 19ஆம் திகதி பத்தரமுல்லையில்!

### ஜனாதிபதியுடன் இணைந்து அஞ்சலி செலுத்த தமிழ், முஸ்லிம் மாவீரர் குடும்பங்களுக்கு விசேட அழைப்பு

கொழும்பு, மே. 15

இலங்கையில் நிலவிய 30 ஆண்டு கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை நிலைநாட்ட உயிர்நீத்த இராணுவ வீரர்களை கௌரவிக்கும் 15ஆவது தேசிய மாவீரர் நினைவு தினம், எதிர்வரும் 19ஆம் திகதி பத்தரமுல்லையில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபிக்கு அருகில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் நடை பெறவுள்ளது. 07

## நாட்டில் சீரற்ற காலநிலை 1,113 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, மே. 15

புத்தளம் உட்பட 7 மாவட்டங்களில் நிலவும் கடும் மழையுடன்கூடிய சீரற்ற காலநிலையால் 3 ஆயிரத்து 400 இற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரத்து 113 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 475 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரணமொன்று பதிவாகியுள்ளது. 07

## வடக்கில் இன்றும் கனமழை!

யாழ்ப்பாணம், மே. 15

இலங்கையின் வடக்கு, மேற்கு, வட மேற்கு, மத்திய, வடமத்திய, கிழக்கு மற்றும் மாகாணங்களின் பல பகுதிகளுக்கு இன்றும் மிதமானது முதல் சற்று கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதனால் சில பகுதிகள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்படக்கூடும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் நேற்றுக் காலை வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது- 07

## பஸிலின் மல்வானை மாளிகையை முற்றுகையிட்ட பல்கலை மாணவர்!


கொழும்பு, மே. 15

பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கு சொந்தமானது எனக் கருதப்பட்டு, தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ள மல்வானை காணி மற்றும் சொகுசு இல்லத்தை உடனடியாகப் பல்கலைக்கழகங்களின் பயன்பாட்டுக்கு அல்லது பொதுமக்களின் நலத்திட்டங்களுக்கு வழங்கக் கோரி அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்று முற்றுகைப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர். 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருமுறிகண்டி கோவிலின் வருமானம் முல்லைத்தீவு அபிவிருத்திக்கே உரியது!

## சத்தியலிங்கம் எம்.பி. சுட்டிக்காட்டு



முல்லைத்தீவு, மே. 15

திருமுறிகண்டி கோவிலின் வருமானம் முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்கே பயன்படுத்தப்படவேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன் போது கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

முல்லைத்தீவு மாவட்டத்தின் திருமுறிகண்டி கோவிலுக்கு கிடைக்கின்ற வருமானங்கள் அனைத்தும் தற்போது பௌத்தசாசன அமைச்சுக்கே செல்கின்றது. குறித்த ஆலயம் நீதிமன்ற வழக்கில் உள்ள ஓர் ஆலயமாகும். வருடாந்தம் பல மில்லியன் ரூபாய்கள் இவ்வாலயத்துக்கு வருமானமாக கிடைக்கின்றது. அவ்வாறு கிடைக்கப்பெறும் வருமானங்கள் பௌத்தசாசன அமைச்சுக்கு செல்வதுடன் அவை மீண்டும் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்குக்கூட திரும்பி வருவதில்லை. குறித்த ஆலயத்தின் மூலம் வருமானமாக பெறப்பட்ட பணமானது வெவ்வேறு தேவைகளுக்காக வடக்கு மாகாணத்துக்கு வெளியே பயன்படுத்தப்படும் நிலை காணப்படுகின்றது.

அவ்வாறில்லாமல், குறித்த ஆலயத்தின் மூலம் வருமானமாக பெறப்படுகின்ற பணம் முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படவேண்டும். குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உள்ளிட்ட உள்ளூராட்சிச் சபைகள் மிகவும் வருமானம் குறைந்த சபைகளாகும். அவற்றின் அபிவிருத்திசார் செயற்பாடுகளுக்கு இப்பணம் பயன்படுத்தப்படவேண்டும். மேலும் மாவட்டத்தில் வேறு அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளுக்கும் அதனை பயன்படுத்தலாம். அதனை இந்த சபை இன்று தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும்-என்றார். (அ)

# யாழ்.மாநகர சபை அமர்வில் முள்ளிவாய்க்கால் நினைவு

யாழ்ப்பாணம், மே. 15

யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வு மாநகர முதல்வர் வி. மதிவதனி தலைமையில் நேற்றுக் காலை ஆரம்பமாகி நடைபெற்றது.

அமர்வின் ஆரம்பத்தில் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற தமிழின இனப்படுகொலையை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்.மாநகரின் முதல்வர் மதிவதனி தலைமையில், நடைபெற்ற அஞ்சலி நிகழ்வின்போது சபா மண்டபத்தில் வைக்கப்பட்ட பிரத்தியேக நினைவுப் படத்தின் முன்பாக ஈகச் சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து அமர்வு ஆரம்பமானது.

குறித்த நினைவுகூரலை ஈ.பி.டி.பி கட்சியின் உறுப்பினர்கள் புறக்கணித்திருந்தனர்.

அமர்வில் நகர அபிவிருத்தி திட்டங்கள், சுகாதார வசதிகள், குடிதண்ணீர் விநியோகம் மற்றும் வீதிப் புனரமைப்பு உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. சபை உறுப்பினர்களும் தங்களது கருத்துகளை முன்வைத்தனர். (அ)

# இரு நாள்கள் மூடப்படும் புத்தூர்-சுன்னாகம் வீதி

யாழ்ப்பாணம், மே. 15


யாழ்ப்பாணம் , சுன்னாகம் - புத்தூர் வீதி எதிர்வரும் சனிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரையில் மூடப்பட்டு இருக்கும் என வடக்கு புகையிரத வழி மற்றும் பணிகள் திணைக்கள பொறியியலாளர் ஜி.கே. சதுரெனோ அறிவித்துள்ளார்.

சுன்னாகம் - புத்தூர் வீதியில் அமைந்துள்ள ரயில் கடவை மார்க்கத்தை அவசரமாக திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளதால், மேற்படி கடவை நாளை சனிக்கிழமை காலை 7.00 மணி முதல் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி வரை மூடப்படும்

அதனால் வாகன போக்குவரத்து பொதுமக்கள் போக்குவரத்துக்கு மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சிப் பகுதியில் வீடுகளில் தொடர் திருட்டு

## இளம் தம்பதி கைது



கிளிநொச்சி, மே. 15

கிளிநொச்சியில் 09 வீடுகளில் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளம் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், திருட்டுப் பொருள்கள் சிலவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கிளிநொச்சி உதயநகர், அம்பாள்குளம், விநாயகபுரம், சாந்தபுரம் மற்றும் கனகாம்பிகைக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 9 வீடுகளுக்குள் பகல் நேரங்களில் புகுந்து திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் அடிப்படையில் விநாயகபுரம் பகுதியை சேர்ந்த 24 வயதுடைய கணவனையும் அவரது 20 வயதுடைய மனைவியையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் 10 பவுண் தங்க நகைகள், தொலைபேசிகள், தொலைக்காட்சி, ஒலிபெருக்கி சாதனங்கள் உள்ளிட்ட பல பொருள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# மீன்பிடித்துறையை நவீனமயப்படுத்த ஜப்பான் அரசு முழுமையான ஆதரவு

கொழும்பு, மே. 15


இலங்கையின் கடற்றொழில் அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ள நவீன தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத் திட்டங்களுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் ஜப்பான் வழங்கும் என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் இசோமட்டா அகியோ தெரிவித்துள்ளார்.

ஜப்பான் தூதுவரின் விசேட அழைப்பின் பேரில், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தூதுவரின் உத்தியோகபூர்வ வதிவிடத்துக்கு விஜயம் செய்தார்.

இந்தச் சந்திப்பின் போது இரு தரப்பினருக்கும் இடையில் சிநேகபூர்வமான கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், அமைச்சர் ஜப்பான் தூதுவருடன் இராப்போசனத்திலும் கலந்துகொண்டார்.

கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் இந்தச் சந்திப்பின்போது பின்வரும் முக்கிய விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

ஜப்பான் அரசாங்கத்தினால்



இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவித் திட்டங்கள் மற்றும் அவற்றை மேலும் வலுப்படுத்துவது குறித்து அமைச்சர் விளக்கமளித்தார்.

கடற்றொழில் அமைச்சின் எதிர்கால இலக்குகள் மற்றும் இலங்கையின் கடல் வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்து அமைச்சர் தூதுவரிடம் எடுத்துரைத்தார்.

கடற்றொழில் துறையில் ஜப்பான் பெற்றுள்ள நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களை இலங்கையிலும் அறிமுகப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

ஜப்பான் தூதுவரின் உறுதிமொழி அமைச்சரின் விளக்கங்களைக் கேட்டறிந்த ஜப்பான் தூதுவர், இலங்கையின் கடற்றொழில் துறையை நவீனமயப்படுத்துவதற்கும், புதிய புத்தாக்கத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் ஜப்பான் அரசாங்கம் எப்போதும் தயாராக இருப்பதாகவும், அதற்கான முழுமையான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

# மருதங்கேணியில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே. 15

வடமராட்சி கிழக்கு இளைஞர்களால் நேற்று வடமாராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டது.

நினைவேந்தலில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காகவும், மாவீரர்களுக்காகவும் இரண்டு நிமிடங்கள் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுபடுத்தும் விதமாக கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் வடமராட்சிக் கிழக்கு இளைஞர்கள், நிர்வாகிகள், உறுப்பினர்கள், பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெயானந்தம் ஜெயகோபி, பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கணைச்செல்வன், முன்னாள் உறுப்பினர் ஆனந்தராஜா சுரேஷ்குமார், காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவர் முரளீதரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
15.05.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு பின்னரான அரை நூற்றாண்டு

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்த "வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு பிறகு நேற்றைய தினத்துடன் சரியாக 50 வருடங்கள் கடந்துவிட்டன. 1976 மே 14ஆம் திகதி வட்டுக்கோட்டையில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் மகாநாட்டில் நிறைவேறிய அந்த தீர்மானம் தமிழர் அரசியலின் போக்கும் இனத்துவ உறவுகளும் முன்னரைப் போன்று இனிமேல் ஒருபோதும் இருக்கப்போவதில்லை என்று ஒரு எல்லைக் கோட்டைக் கீறியது.

தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் இணக்கத் தீர்வு சாத்தியமேயில்லை என்ற நிலையில், தனிநாடு ஒன்றைத் தவிர வேறு விமோசனம் கிடையாது என்று பிரகடனம் செய்த அந்த தீர்மானத்துக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமான வடக்கு, கிழக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் அங்கீகாரத்தை பெறுவதற்கு தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி 1977 ஜூலை பொதுத்தேர்தலை பயன்படுத்தியது.

இரு மாகாணங்களிலும் 18 தொகுதிகளில் மகத்தான வெற்றியைப் பெற்ற கூட்டணி தனிநாட்டுக்கு தமிழ் மக்களின் அங்கீகாரம் கிடைத்துவிட்டதாக கூறியபோதிலும், அந்த ஆணையை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு எந்தவிதமான திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை.

பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கிய கூட்டணி 1981 ஆம் ஆண்டில் மாவட்ட சபைகளை தற்காலிகமான ஒரு ஏற்பாடாக ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குள்ளானது.

அதன் விளைவாக தமிழர்களின் உரிமைப் போராட்ட தலைமைத்துவம் தவிர்க்க முடியாமல் ஆயுதமேந்திய தமிழ்ப் போராளிக் குழுக்களிடம் போய்ச் சேர்ந்ததும் அந்த குழுக்கள் கூட்டணியின் தலைவர்களினால் பெற்றுக் கொடுக்க முடியாத "தமிழீழத்தை" காண்பதற்கு நடத்திய போராட்டங்கள் (இறுதியில் அது முழுவீச்சிலான போராக மாறியது) தனிநாடு ஒன்றை எவ்வாறு காண்பது என்பதற்கு அல்ல, எவ்வாறு காண்பதில்லை என்பதற்கான எடுத்துக் காட்டாக மாறியதும் அண்மைக்கால வரலாறு.


தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் பிரதான அங்கத்துவ கட்சியான இலங்கை தமிழரசு கட்சி கால் நூற்றாண்டுக்கு மேலாக குரல்கொடுத்துவந்த கூட்டாட்சி (சமஷ்டி) கோரிக்கையை கைவிட்டுத்தான் தனிநாட்டுக்கான கோரிக்கை முன்வைத்தது. அந்த கோரிக்கையின் கொள்கைப் பிரகடனமாக அமைந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு பிறகு 50 வருடங்களும் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து 17 வருடங்களும் கடந்துவிட்ட நிலையில் மீண்டும் வரலாறு திரும்பி சகல தமிழ்த் தேசியவாத கட்சிகளும் கூட்டாட்சி முறையை அடிப்படையாகக் கொண்ட தீர்வையே வேண்டிநிற்பதை இன்று காண்கிறோம்.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டம் முழுமையாக ஒரு வட்டடத்தை பூர்த்தி செய்திருக்கும் இந்த காலப்பகுதிக்குள் போரின் விளைவான அவலங்கள் வடக்கு, கிழக்கு தமிழர் அரசியல் நிலக்காட்சி பாரிய மாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த பின்புலத்தில் தான் " வட்டுக்கோட்டைத் தீர்மானம்" அரை நூற்றாண்டை நிறைவு செய்திருக்கிறது.

தனிநாட்டுக் கோரிக்கையை தமிழர்கள் முன்வைத்த அன்றைய புறச் சூழ்நிலை பாரியளவில் மாறியிருந்தாலும், அதை முன்வைப்பதற்கு காரணியாக அமைந்த அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. போரின் முடிவுக்கு பிறகு தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொனறைக் காண வேண்டிய அவசியமில்லை என்ற உணர்வுடன் தென்னிலங்கை அரசியல் சமுதாயம் இருக்கின்ற அதேவேளை, அரசாங்கத் துக்கு நெருக்குதலைக் கொடுக்கக்கூடிய வலிமையான எந்தவொரு அரசியல் போராட்டத்தையும் முன்னெடுக்க முடியாத நிலையில் தமிழ் அரசியல் சமுதாயம் இருக்கிறது. அரை நூற்றாண்டுக்கு பின்னரான உண்மையான நிலைவரம் இதுவேயாகும்.

நினைவுகளையே "பேராயுதமாக" கருதும் இன்றைய தமிழ் அரசியல் சக்திகள் வட்டுக்கோட்டை தீர்மானத்தையும் நினைவுகூருகின்றன... அவ்வளவுதான்!

# ஆபரேஷன் சிந்தூர்
# இந்தியா கற்றதும் கல்லாததும்


- கேணல் ஆர். ஹரிஹரன்

பாகிஸ்தானை எதிர்த்து இந்திய இராணுவப் படைகள் 2025 மே மாதத்தில் தொடுத்த ஆபரேஷன் சிந்தூர் 1971 ஆம் ஆண்டின் பங்களாதேஷ் போருக்கு இந்தியா நடத்திய மிகப் பெரிய போராகும்.

மே 6 - மே 10, 2025 ஆகிய திகதிகளுக்கு இடையே நிகழ்ந்த ஐந்து நாள் போர், பல அரசியல் மற்றும் இராணுவப் பாடங்களை வழங்குகிறது. அவற்றில் மிகவும் முக்கியமானது, பகல்காமில் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக ஆபரேஷன் சிந்தூர் மூலம் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத இயக்கங்களின் கேந்திரங்களை அழித்ததன் மூலம் ஆளில்லா விமானங்கள் இணைந்து செயற்பட்டது இந்திய இராணுவத்தின் போர்முறை கொள்கையில் ஒரு புதிய அத்தியாயம் என்று கூறலாம்.

இந்த மாற்றம் முப்படைகளுக்கு இடையேயான வெற்றிகரமான ஒருங்கிணைப்பையும், "ஆத்மநிர்பர்" (தற்சார்பு) பாதுகாப்புத் திறன்களையும் வெளிபடுத்தியுள்ளது.

இதில், முப்படைகளும் மிகச் சிறப்பாகச் செயற்பட்ட அம்சங்கள் ஒருபுறம் இருந்தாலும், எதிர்கால மோதல்களுக்கான தயார் நிலையை உறுதி செய்யும் வகையில் கூடுதல் கவனம் தேவைப்படும் அம்சங்களும் உள்ளன.

**பாகிஸ்தான் தீவிரவாதிகள் காஷ்மீரில் சுற்றுலா தலமான பஹல்காமில் 26 சுற்றுலா பயணிகளை, அவர்கள் இந்துக்கள் என்ற ஒரே காரணத்துக்காக உயிரைக் குடித்தார்கள்.**

இந்தியா பாகிஸ்தான் தீவிரவாத அரசியலை முடிவுக்கு கொண்டு வரும் என்ற புதிய அரசியல் நிலைப்பாட்டை தெளிவாக்கியது.

இந்த நிலைப்பாட்டை இந்தியாவின் "புதிய இயல்பு" (New Normal) என்று பிரதமர் நரேந்திர மோடி தெளிவுபடுத்தினார் என்பது குறிப்பிடத் தக்கது.

பல களங்களில் இந்தியா அதி தீவிரமாக நடத்திய இந்தப் போரில், முதல் முறையாக இராணுவம் உள்நாட்டில் தயாரித்த பிரமோஸ் ஏவுகணைகள் மற்றும் எதிரி விமானங்களை எதிர்த்து இந்தியாவில் உருவாக்கப்பட்ட நவீன உள்நாட்டு பல்லடுக்கு வான் பாதுகாப்பு வலையமைப்பைப் பயன்படுத்தியது. இந்தியா முழுவதும் உள்ள இராணுவ நிலைகளைக் குறிவைத்து பாகிஸ்தானிலிருந்து வந்த ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகளின் தொடர் தாக்குதல்களை முறியடிப்பதில் இவை முக்கிய பங்காற்றின.

இதைத்தவிர, இந்தப் போரில் இந்தியாவின் முப்படைகளும் ஒருங்கிணைந்த தலைமையின் கீழ் முதன் முறையாக ஒன்றுபட்டுச் செயற்பட்டன. அதே மாதிரி முதன் முறையாக உள்நாட்டில் தயாரான சுற்றித்திரியும் வெடிமருந்துகள் (Loitering munitions), ஆளில்லா விமானங்கள் உள்ளிட்ட ஆயுதங்களை போருக்கு உபயோகித்ததை சீனாவும் பாகிஸ்தானும் கவனித்திருக்கும்.

இந்த போரில் பாகிஸ்தான் பகுதிகளான பஞ்சாப் மற்றும் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீரில் துல்லியமான தாக்குதல்களுக்கு விமானத் தாக்குதல்களுடன் ஏவுகணைகள் மற்றும்

உள்ளன.

முக்கிய குறைபாடுகள் என்ன என்பதை பார்க்கலாம். இந்த குறைபாடுகளை நீக்க வழி காணாவிட்டால் முப்படைகளின் தயார்நிலை குறைய ஏதுவாகும்.

பாகிஸ்தான் தீவிரவாதிகள் காஷ்மீரில் சுற்றுலா தலமான பஹல்காமில் 26 சுற்றுலா பயணிகளை, அவர்கள் இந்துக்கள் என்ற ஒரே காரணத்துக்காக உயிரைக் குடித்தார்கள். அந்த லஷ்கர் தீவிரவாதிகளின் ஊடுருவலைப் பற்றிய விவரங்கள் எந்த ஒரு புலனாய்வுத் துறைக்கோ அல்லது போலீசுக்கு வரவில்லை. இத்தகைய குறைபாடுகளை தவிர்க்க அந்த அமைப்புகளை முடுக்கிவிடவேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த ஆண்டில் (2025-2026), இந்தியப் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அமைப்புகள் குறைந்தது 15 முதல் 20 வரையிலான பயங்கரவாதக் குழுக்களை (அழனரடநள) முறியடித்திருந்தன. இவற்றில் பெரும்பான்மையானவை. ஐ.சி.ஸ்., அல்-கயிதா, ஜயிஷ் ஏ மொகம்மத் மற்றும் கஷ்மீரில் இயங்கும் அன்சர் கஸ்வா ஏ ஹிந்த் (AGH) போன்ற ஜிஹாதி அமைப்புகளுடன் தொடர்புடையவையாக இருந்தன. இவற்றுள், சுமார் 10 முதல் 12 குழுக்கள் வெளிப்படையாகவே ஜிஹாதித் தன்மையைக் கொண்டவையாக இருந்தன் எஞ்சியவை பப்பர் கல்ஸா (BKI) போன்ற காலிஸ்தான் குழுக்களுடனும், போதைப்பொருள் சார்ந்த பயங்கரவாத வலைப் பின்னல்களுடனும் தொடர்புடையவையாக இருந்தன.

குஜராத் பயங்கரவாத எதிர்ப்புப் படையினர் ஐ.சி.ஸ்.(ஆப்கானிஸ்தான்) அமைப்பைச் சேர்ந்த மூன்று பேரைக் கைது செய்தனர் இரசாயன முன்னோடிப் பொருட்களைக் கைப்பற்றினர்.

உத்தர பிரதேசத்தில் அல்-கொய்தா பிரச்சாரக் குழுவின் செயல்பாட்டாளர் மற்றும் 4,000-க்கும் மேற்பட்ட பாகிஸ்தான் தொடர்புடையவர்களை உத்தரப் பிரதேச பயங்கரவாத எதிர்ப்புப் படையினர், கைது செய்தனர்.

ஆகவே தொடர்ந்து எல்லை மாநிலங்கள், முக்கியமாக குஜராத், பஞ்சாப், அஸ்ஸாம், மேற்கு வங்கம் மற்றும் காஷ்மீர் மாநிலங்கள், மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து செயற் படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. கட்சி வேறுபாடுகளை ஒதுக்கி தீவிரவாதத்தை எதிர்த்துச் செயல்படுவதில் இன்னும் தேவையான முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது துக்ககரமானதேயாகும்.

இரண்டாவதாக, இந்தியா போரில் வென்றாலும், அதைப் பற்றிய விவரங்களை பத்திரிகை உலகுக்கு தெரிவிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதற்கு மாறாக, பாகிஸ்தான் போரைப்பற்றிய பொய்யான தகவல்களை மேற்கத்திய ஊடகங்கள் மூலம் முந்திக் கொண்டு பரப்பியது. உடனுக்குடன் செய்திகள் மின்வலைகள் மூலம் பரவும் இக்காலத்தில், இத்தகைய மெத்தனம் அரசியல் மற்றும் பாதுகாப்பு குறைபாடுகளைப் பற்றிய தவறான செய்திகளை பரப்ப எதிரி நாடுக்கு உதவும் என்பதில் சந்தேகமில்லை.

மேலும், ஒபரேஷன் சிந்தூரின் போது, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பாகிஸ்தானுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தானே இந்திய-பாகிஸ்தான் போரில் அமைதிகாண உதவியதாக பல முறை கூறினார். இதை அவர் சுய ஆதாயத்துக்காக கூறினாலும் அதை வலுவாக மறுக்க இந்திய வெளியுறவு அலுவலகம் தவறியது.

அத்தகைய அந்நிய தலையீட்டை எவ்வாறு கையாள வேண்டும் என்பதை இந்தியா சிந்தித்து செயல்பட வேண்டும்.

**(கேணல் ஆர். ஹரிஹரன் இந்திய இராணுவ புலனாய்வுப் பிரிவில் சுமார் 25 ஆண்டுகள் பணியாற்றியவர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மிதுனம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும்நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சிலதந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். பொறுமை தேவைப்படும் நாள்.

**கன்னி**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**துலாம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் சில நுணுக்கங்களைகற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**விருட்சிகம்**
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறை வேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**தனுசு**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு. பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கும்பம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை முடிப்பீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்ப தால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

# இலங்கையில் வருடாந்த மரணங்களில் 6 சதவீதம் ஆஸ்துமாவினால் நிகழ்கிறது

கொழும்பு, மே 15

இலங்கையில் ஒவ்வோர் ஆண்டும் நிகழும் மரணங்களில் சுமார் 6 சதவீதமானவை ஆஸ்துமா நோயினால் ஏற்படுவதாக சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

சரியான சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதன் மூலம் இந்த நோயை குணப்படுத்த முடியும் என்று இலங்கை சுவாச நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் சுமன ஹந்தகல தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஆஸ்துமா நோய் உலகம் முழுவதும் பரவலாகக் காணப்படும் ஒரு நோயாகும். உலகில் சுமார் 260 மில்லியன் மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் தாக்கம் குறிப்பாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்களிடையே அதிகமாகக் காணப்படுகிறது. உலகில் நாளொன்றுக்கு சுமார் 1000 பேர் இந்நோயினால் உயிரிழப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இது ஒரு தொற்றாத நோயாகும்.

இலங்கையில் ஒவ்வோர் ஆண்டும் நிகழும் மரணங்களில் சுமார் 6 சதவீதமானவை ஆஸ்துமா நோயினால் ஏற்படுகிறது.

சரியான சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதன் மூலம் இந்த நோயை குணப்படுத்த முடியும். -என்றார். (எ)

# பல மாவட்டங்களுக்கு "சிவப்பு எச்சரிக்கை"

கொழும்பு, மே 15

இலங்கைக்கு தென்மேற்கு திசையில் நிலைகொண்டுள்ள குறைந்த அழுத்தப் பிரதேசம் காரணமாக, நாட்டின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுக்காலை 09.30 மணிக்கு வெளியிடப்பட்ட இந்த எச்சரிக்கை அறிவிப்பு இன்று முற்பகல் 08.30 மணி வரை செல்லுபடியாகும்.

இதன்படி மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்கள் மற்றும் கண்டி, நுவரெலியா, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு இந்த அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த 36 மணித்தியாலங்களுக்குள் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மிக பலத்த மழை பெய்யக்கூடும்.

இடி மின்னலுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களிலிருந்து பாதுகாப்பு பெற பொதுமக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் புத்தளத்தில் அதிகபட்சமாக 256.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

(எ)

# எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிக்கு ஒருவர் துறவறத்தை விட்டுசெல்ல உரிமை உண்டு

## ஓமல்பே சோபித தேரர் சொல்கிறார்

கொழும்பு, மே 15

எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எந்தவொரு பிக்குவுக்கும் தனது துறவற ஆடையைக் களைந்து விட்டு செல்லும் உரிமை உண்டு. அதற்கு எவராலும் தடைகளை விதிக்க முடியாது. பௌத்த பிக்கு ஒருவருக்கு மனித உரிமைகள் என்று சொல்லிக் கொள்ள எதுவு மில்லை என்று சிறீபோதிராஜ அறக்கட்டளையின் ஸ்தாபகர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



பௌத்த பிக்கு ஒருவருக்கு மனித உரிமைகள் என்று சொல்லிக் கொள்ள எதுவுமில்லை. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போது ஜனநாயக உரிமைகளையும் மனித உரிமைகளையும் சுமந்துதான் இவ்வுலகத்துக்கு வருகிறான். ஆனால், பிக்கு ஒரு நிலைப்பாட்டில் அந்த அனைத்து உரிமைகளையும் தியாகம் செய்துவிட்டுத்தான் சாசனக் கோட்பாட்டுக்குள்ளே நுழைகிறார். தனது சுய விருப்பத்தின் பேரில் தனக்கிருந்த மனித உரிமைகளை நிராகரித்துவிட்டுத்தான் அவர் துறவறத்தை ஏற்கிறார்.

அவ்வாறு துறவறம் பூணும் ஒரு பிக்கு, அன்று முதல் மூன்று விதமான சட்ட அமைப்புகளுக்குக் கட்டுப்படுகிறார். முதலாவது, விநய பிடகத்தில் புத்த பெருமானால் விதிக்கப்பட்டுள்ள பிராதிமோட்ச விதிகள். இரண்டாவது, நாட்டின் இராஜ நீதி எனப்படும் அரச சட்டம். தான் ஒரு பிக்கு என்பதற்காக நாட்டின் சட்டத்திலிருந்து விலகிவிட முடியாது. பிக்குகள் அரச சட்டத்துக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பது தர்ம நூல்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மூன்றாவது, சமூக ஒழுக்க விழுமியங்கள் தொடர்பான விதிகள். இந்த மூன்று சட்டப் பிரிவுகளுக்கும் பிக்குகள் அடிபணிய வேண்டும்.- என்றார்.

# கணேமுல்ல சஞ்சீவ கொலை: "கம்பஹா ஒஸ்மண்ட்" கைது!

கொழும்பு, மே 15

கணேமுல்ல சஞ்சீவ என்பவரை கொலை செய்வதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் "கம்பஹா ஒஸ்மண்ட்" என அழைக்கப்படும் ஒஸ்மண்ட் குணசேகர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, இரண்டு மகசின்கள் மற்றும் 10 தோட்டாக்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனும் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# தெற்கு அதிவேக வீதியின் நுழைவு வீதிகள் திறப்பு

கொழும்பு, மே 15

வெள்ளத்தால் மூழ்கியிருந்த தெற்கு அதிவேக வீதியின் வெலிபென்ன பரிமாற்ற நுழைவு வீதிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் குறித்த பரிமாற்றப் பகுதியில் உள்ள அளுத்கம - மத்துகம வீதி வெள்ளத்தில் மூழ்கியதன் காரணமாக, கொழும்பு நோக்கி நுழையும் வாயில், கொழும்பிலிருந்து வரும் வாகனங்கள் வெளியேறும் வாயில் மற்றும் காலியிலிருந்து வரும் வாகனங்கள் வெளியேறும் வாயில் என்பன சொகுசு மற்றும் சிறிய ரக வாகனங்களுக்காக தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன.

தற்போது வெள்ள நீர் வடிந்துள்ள நிலையில், போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக வெலிபென்ன பரிமாற்ற நுழைவு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஹேக்கர்களால் திருடப்பட்ட 6.6 மில்லியன் டொலர் மீட்பு

கொழும்பு, மே 15

ஆசிய நாடு ஒன்றிலிருந்து சைபர் குற்றவாளிகளால் திருடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 6.6 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை ஓமான் அரச பொலிஸார் மீட்டனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தொகையை ஓமானில் உள்ள வங்கி ஒன்றின் ஊடாக அந்த நாட்டு நாணயத்திற்கு மாற்ற முயன்றபோது, பொலிஸார் அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் மூலமே இந்தப் பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

சைபர் குற்றவாளிகளால் இந்தப் பணம் எந்த ஆசிய நாட்டிலிருந்து திருடப்பட்டது என்பது இதுவரை அதிகாரபூர்வமாக வெளிப்படுத்தப்படவில்லை.

எவ்வாறாயினும் அண்மையில் இலங்கையின் திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் டொலர்களும், தபால் திணைக்களத்திலிருந்து 625,000 டொலர்களும் திருடப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனால், ஓமானில் மீட்கப்பட்ட பணத்திற்கும் இலங்கையில் காணாமல் போன பணத்திற்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து தற்போது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இலங்கையை தவிர வேறு எந்த ஆசிய நாட்டிலிருந்தும் அண்மைக் காலத்தில் இவ்வளவு பெரிய அளவிலான பணம் காணாமல் போனதாக தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

# விசாயின்றி தங்கியிருந்த சீனப் பிரஜை கைதானார்

**வெளிநாட்டு சிகரெட் பறிமுதல்**

கொழும்பு, மே 15

செல்லுபடியாகும் விசா இன்றி இலங்கையில் தங்கியிருந்த வெளிநாட்டவர் ஒருவர், தீர்வை வரி செலுத்தப்படாத வெளிநாட்டு சிகரெட்களுடன் கொழும்பு மத்திய பிரிவு குற்றப்புலனாய்வு பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மத்திய பிரிவு குற்றப்புலனாய்வு பணியகத்தின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, செவ்வாய்க்கிழமை 12 ஆம் திகதி இரவு மருதானை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான நபர் 54 வயதுடைய சீனப் பிரஜை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் செல்லுபடியாகும் விசா உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இன்றி இந்நாட்டில் தங்கியிருந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. அத்தோடு, இவரிடமிருந்து தீர்வை செலுத்தப்படாத 1200 வெளிநாட்டு சிகரெட்களும் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர் தொடர்பில் மருதானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# ரூ. 35, 000 இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு வருமான வரி அலுவலக ஊழியர் கைது

கொழும்பு, மே 15

35 ஆயிரம் ரூபாய "பணத்தை இலஞ்சமாக கோரிப் பெற்றுக்கொண்ட பொலநறுவை மாவட்ட வருமான வரி அலுவலக துப்புரவு பணியாளர் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எதிரிவீர ஆறுகட்டு பட்டபெந்திகே சுமித் இந்திக குமார எனும் அலுவலக துப்புரவு பணியாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். பொலநறுவை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே இவர் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முறைப்பாட்டாளரின் சகோதரர் ஒருவருக்குச் சொந்தமான காணியை முறைப்பாட்டாளரின் பெயருக்கு மாற்றி காணி உரிமப்பத்திரம் தயாரிப்பதற்காக, குறித்த காணியின் பெறுமதியை மதிப்பிட்டு அப்பத்திரத்தில் குறைவாகக் காண்பிக்க சந்தேகநபர் உதவியுள்ளார். இதன் மூலம் செலுத்தப்பட வேண்டிய முத்திரை வரி கட்டணத்தைக் குறைத்து, மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொடுப்பதற்காக 50 ஆயிரம் ரூபா பணத்தை இவர் இலஞ்சமாகக் கோரியுள்ளார்.

பின்னர் குறித்த தொகையை 35 ஆயிரம் ரூபாவாகக் குறைத்துக்கொண்ட சந்தேகநபர், அந்த பணத்தைப் பெற்றுக்கொள்ளும் போதே இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதானநபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்றது. (எ)

# காலியில் மின்சாரம் தாக்கி வயோதிபப்பெண் மரணம்

காலி, மே 15

காலி - ஊரகஸ்மங்ஹந்திய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரகினாகந்த பகுதியில் மின்சாரம் தாக்கி வயோதிபப் பெண் ஒருவர், நேற்று முன்தினம் புதன்கிழமை காலை உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ரகினாகந்த, மீகஸ்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 74 வயதுடையவர் என்று தெரியவந்துள்ளது.

குறித்த பெண் அருகிலுள்ள வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது, மரமொன்று முறிந்து விழுந்ததில் அறுந்து கிடந்த மின்சாரக் கம்பியில் சிக்கி, மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கடலில் பயணம் செய்வோர் மற்றும் மீனவர்களுக்கு விசேட அறிவித்தல்

கொழும்பு, மே 15

நாட்டிற்கு வடகிழக்காக நிலை கொண்டுள்ள குறைந்த அழுத்தப் பிரதேசம் தொடர்ந்தும் காணப்படுகின்றது. இத்தொகுதி இலங்கையை விட்டு விலகி நகரக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் அடுத்த 36 மணித்தியாலங்களில் படிப்படியாக வலுவிழக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இந்த அமைப்பின் தாக்கம் காரணமாக, எதிர்வரும் நாட்களில் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகம் மற்றும் மழை பெய்யும் தன்மை அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால முன்னறிவிப்புகள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.

இதன்படி, நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். காற்று தென்மேற்கு திசையிலிருந்து வீசும் என்பதுடன், காற்றின் வேகம் மணிக்கு 25-35 கிலோமீற்றர் அளவில் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கேசன்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 50-60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும். இதன் காரணமாக இக்கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். ஏனைய கடற்பரப்புகள் ஓரளவு கொந்தளிப்பாக அமையலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகளின் உயரம் சுமார் 2.0 - 2.5 மீற்றர் வரை உயரக்கூடிய சாத்தியம் உள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் இக்கடற்பரப்புகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், இவ்வேளைகளில் கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நிதி மோசடி குற்றச்சாட்டு குறித்து வங்கி ஊழியர்கள் ஏழு பேர் கைது

கண்டி, மே 15

கண்டி நகரத்தில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றில் பணியாற்றும் ஏழு ஊழியர்கள் மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி நகரத்தில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றின் ஊழியர்கள் 07 பேர், போலி ஆவணங்களைத் தயாரித்து அந்த வங்கியின் வாடிக்கையாளர்களது பெயரில் மோசடியான முறையில் கடன் பெற்றுக் கொண்ட சம்பவம் தொடர்பில் கண்டிப் பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட வங்கி ஊழியர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மூன்று இளைஞர்கள் உட்பட நால்வர் விபத்துக்களில் பலி!

கொழும்பு, மே 15

நாடளாவிய ரீதியில் பல இடங்களில் இடம்பெற்ற கோர விபத்துக்களில் நால்வர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் அஹங்கம- திருக்கோவில், வெலிவேரிய மற்றும் பிடிகல ஆகிய இடங்களில் இந்த விபத்துக்கள் இடம்பெற்றன.

நேற்று முனதினம் அதிகாலை அஹங்கம - இமதுவ வீதியில் கடுகஹவத்தை சந்திக்கு அருகில், மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்தில் மோதியதில் விபத்து ஒன்று ஏற்பட்டது. இதில் படுகாயமடைந்த 25 வயதுடைய அஹங்கம பகுதியைச் சேர்ந்த இளைஞன் உயிரிழந்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் காலை திருக்கோவில் - பொத்துவில் வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. இதில் படுகாயமடைந்த திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலை ரத்துபஸ்வல - ஹேனேகம வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்ததில், எதிரே வந்த லொறியுடன் மோதி விபத்து ஒன்று ஏற்பட்டது. இதில் மோட்டார் சைக்கிளின் பின்னால் பயணித்த 24 வயதுடைய இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேபோல், நேற்று முன்தினம் காலை பிடிகல - பெலவத்தை வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து கல்வெட்டு ஒன்றில் மோதியதில் 21 வயதுடைய இளைஞன் உயிரிழந்தார்.

இந்த விபத்துக்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை அந்தந்த பகுதி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## டுபாய் அசிதவின் சொத்துக்களை முடக்க உத்தரவு

கொழும்பு, மே 15

பெருமளவான போதைப்பொருள் கடத்தல்காரராகக் கருதப்படும் "டுபாய் அசித" என்பவருக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் 105 பவுண் தங்கத்தை முடக்குவதற்கு பாணந்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்தில் முன்வைத்த காரணிகளை தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவருக்குச் சொந்தமான சுமார் 70 இலட்சம் ரூபாய் பெறுமதியான வான் ஒன்றையும், 10 இலட்சம் ரூபாய் பணத்தையும் முடக்க நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் தங்கம் மற்றும் பணம் ஆகியவற்றை "டுபாய் அசித" தமது உறவினர்களின் பெயர்களில் கொள்வனவு செய்திருந்தமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (எ)

## கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்த ஆளுநர் அறிவுறுத்தல்

திருமலை, மே. 15

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில், கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகத்தின் மாதாந்த முன்னேற்ற ஆய்வுக் கூட்டம் திருகோணமலையிலுள்ள முதலமைச்சர் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக அரச நிதியுதவியுடன் முதலமைச்சர் செயலகத்தின் கீழுள்ள பல்வேறு நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்து இதன்போது விரிவாக விவாதிக்கப்பட்டது.

குறிப்பாக, திணைக்களங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை ஆளுநர் நேரடியாக மீளாய்வு செய்துடன்,

ஆளுநரின் பணிப்புரையின் கீழ் நடைபெற்று வரும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் எவ்வித தாமதமுமின்றி, உரிய காலப்பகுதிக்குள் நிறைவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்களுக்கு ஆளுநர் இதன்போது கடுமையான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

மக்கள் நலன் கருதி முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டங்களின் நன்மைகள் உரிய நேரத்தில் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## யானை தாக்கியதில் பெண் ஒருவர் பலி!

கொழும்பு, மே 15

கிரில்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிரிசெதகம பகுதியில் புதன்கிழமை அதிகாலை காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் சிரிசெதகம பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய பெண் என தெரியவந்துள்ளது.

## நதிகளின் நீர்மட்டம் குறைவு

கொழும்பு, மே 15

கடந்த 24 மணித்தியாலங்களில் மழை வீழ்ச்சி குறைந்ததன் காரணமாக, அதிகரித்திருந்த நதிகளின் நீர்மட்டம் குறைவடைந்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நிலைமையின் கீழ் நில்வளா ஆறு, கிங் ஆறு, களு ஆறு மற்றும் அத்தனகலு ஓயா போன்ற நதிகளின் நீர்மட்டம் குறைவடைந்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் நீரியல் மற்றும் பேரிடர் மேலாண்மை பிரிவின் பணிப்பாளர் எல்.எஸ். சூரியபண்டார தெரிவித்தார்.

குறிப்பாக களுகங்கையின் மில்லகந்தை தவிர்ந்த ஏனைய இடங்களில் நீர்மட்டம் குறைந்து வருவதாக குறிப்பிட்ட அவர், மழை வீழ்ச்சி குறைவினால் இந்த நிலை ஏற்பட்டிருந்தாலும், எதிர்வரும் நாட்களில் மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளதால் இது ஒரு தற்காலிக நீர்மட்டக் குறைபாக இருக்கலாம் என்றும் கூறினார்.

தற்போது 73 பிரதான நீர்த்தேக்கங்களில் 18 நீர்த்தேக்கங்களும், 18 நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களும் வான்பாய்ந்து வருகின்றன.

எவ்வாறாயினும், இந்த நீர் வெளியேற்றம் பெரிய அளவிலான வெள்ள அபாயத்தை ஏற்படுத்தாது எனவும், நிலைமைகளை அவதானித்து செயற்படுமாறும் அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் திறக்கப்பட்டிருந்த அனைத்து வான் கதவுகளும் நேற்று காலை 07.00 மணியளவில் மூடிவிடப்பட்டுள்ளது என்று வாரியபொல பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (எ)

## மூதூரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



திருகோணமலை, மே 15

முள்ளிவாய்க்கால் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மூதூர் கிழக்கு - அம்மன்நகர் பகுதியில் புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வை நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் உயிரிழந்தவர்களுக்காக தீபச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்தூவி ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது. நினைவேந்தல் நிகழ்வில் பொது மக்கள், சிறுவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

### மூதூரில் ரூ. ஏழு இலட்சம் பணம் மற்றும்

## ஐஸ் போதைப்பொருளுடன் கணவன் மனைவி கைது

திருகோணமலை, மே 15

மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட - ஆலிம் நகர் பகுதியில், கணவனும் 33 வயதுடைய மனைவியுமான இரு வியாபாரிகள் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ஏழு இலட்சம் ரூபாய் பணம், ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஒரு தொலைபேசி என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் போதைப்பொருள் விற்பனை இடம்பெற்று வந்த வேளையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சந்தேகநபர்களிடமிருந்து 3 கிராம் 200 மில்லிகிராம் அளவிலான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூதூர் போதை ஒழிப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இந்த கைது இடம்பெற்றது. (எ)

## ரஷ்ய பல்கலைக்கழக தூதுக்குழு கிழக்கு மாகாண ஆளுநர் சந்திப்பு



திருகோணமலை, மெ 15

ரஷ்யாவின் I.Y. Yakovlev பெயரிடப்பட்டுள்ள The Chuvash State Pedagogical University பல்கலைக்கழகத்தின் சிறப்பு தூதுக்குழு நேற்று முன்தினம் திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவை சந்தித்தனர்.

இந்த சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தில் ரஷ்ய மொழியை மேம்படுத்துதல் மற்றும் அதன் மூலம் கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் பல்கலைக்கழக மாணவர்களுக்காக ரஷ்ய மொழி நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்துவது, அவர்களின் சர்வதேச தொடர்பாடல் திறன்களையும் கல்வி பன்முகத்தன்மையையும் மேம்படுத்துவதற்கான முக்கியமான முன்னெடுப்பாக விவாதிக்கப்பட்டது.

மேலும், ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வரும் தற்போதைய சூழலில், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் பணியாற்றுவோருக்கு ரஷ்ய மொழிப் பயிற்சி வழங்குவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. இதன் மூலம் சேவைத் தரத்தை உயர்த்துவதும், பிராந்தியத்தின் பொருளாதார நடவடிக்கைகளை வளர்த்தெடுப்பதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறுகியகாலத் திட்டமல்லாது, நீண்டகால ஒத்துழைப்பு வேலைத்திட்டமாகும் என்பதை இரு தரப்பினரும் வலியுறுத்தியதுடன் தொடர்ச்சியான பாடத்திட்ட ஒத்துழைப்பு மற்றும் பேராசிரியர் பரிமாற்றத் திட்டங்கள், பிராந்திய தொழில் முனைவோர் மற்றும் விருந்தோம்பல் துறையின் அதிகாரிகளுக்கான பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல், இலங்கையின் கிழக்கு மாகாணம் மற்றும் ரஷ்ய கூட்டாட்சி நாடு இடையிலான கலாசார உறவுகளை வலுப்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்த கூட்டாண்மை மூலம் கிழக்கு மாகாண இளைஞர்களுக்கு புதிய சர்வதேச வாய்ப்புகள் உருவாகுவதோடு, சுற்றுலாத்துறைக்கும் புதிய பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படும் என்ற நம்பிக்கையும் வெளியிடப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## எரிந்த மருந்து...

த. சத்தியமூர்த்தியுடன் கலந்துரையாடியதுடன் அண்மையில் தீ விபத்துக்கு உள்ளன மருந்துக் களஞ்சியசாலையையும் பணிப்பாளருடன் சென்று பார்வையிட்டார்.

அதனை தொடர்ந்து தீ விபத்து தொடர்பான விசாரணைகள் தொடர்பிலும் , மருந்துகள் எடுத்து வரப்படுவது தொடர்பிலும் தற்போதைய தேவைகள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்து கொண்டார். (அ)

## கல்வி நிகழ்வுகளுக்கு...

விளையாட்டு அரங்கில் இராணுவத்தினர் ஏற்பாடு செய்த புது வருட நிகழ்வுக்கு மைதான குத்தகையை மாநகர சபைக்கு வழங்காது, ஆளுநர் தன்னிச்சையாக அனுமதியை வழங்கியுள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மாநகர சபை தீர்மானங்களை மீறி வடக்கு மாகாண ஆளுநர் அரசாங்கத்தின் எடுபிடியாக சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை இல்லாமல் செய்ததை ஏற்க முடியாது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களால் ஏற்பாடு செய்த நிகழ்வுகளுக்கு வரிச் சலுகை வழங்க முடியாது என மாநகர சபை தீர்மானத்தை மீறி உத்தரவு போடும் ஆளுநர், எவ்வாறு இராணுவ நிகழ்வுக்கு எவ்விதவிதமான பணமும் அறவிடாது அனுமதி வழங்க முடியும்.

உயரிய சபையில் முதல்வர் முன்னிலையில் எடுக்கப்படும் தீர்மானத்தை ஆளுநர் தன்னிச்சையாக மீறுவாராயின் மக்கள் சபை எதற்கு எனக் கேள்வி எழுப்பினார்.

இதன்போது குறுக்கீடு செய்த முதல்வர் மதிவதனி, சில விடயங்கள் சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டாலும் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்படவேண்டும் என்பது சட்டம்.

ஆளுநர் எதைச் சொல்லுகிறாரோ அதை நடைமுறைப் படுத்தினோம்-என்றார்.

இதன்போது எழுந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மற்றும் ஒரு உறுப்பினர், ஆளுநர் எதைச் சொன்னாலும் செய்யலாம் என்றால் இந்த சபை எதற்கு? கலைத்து விட்டு ஆளுநர் பார்க்கட்டும்-என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த முதல்வர், சபையில் இவ்வாறான விடயங்கள் இடம்பெற்றுமை தொடர்பில் ஆளுநருக்கு தெரியப்படுத்துவதாக தெரிவித்தபோது சபை அமைதி நிலையை அடைந்தது. (அ)

## பஸிலின் மல்வானை...

கம்பஹா - மல்வானை பகுதியில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த பிரமாண்டமான சொகுசு இல்லம் மற்றும் காணி, கடந்த காலங்களில் பஸில் ராஜபக்ஷவின் நிதியில் நிர்மாணிக்கப்பட்டதாகக் கூறி நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

எனினும், நீதிமன்ற விசாரணைகளின்போது குறித்த காணி மற்றும் கட்டடத்துக்குத் தாம் உரிமையாளர் அல்லவென பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் தெரிவித்திருந்த நிலையில், இந்தச் சொத்து நீண்ட காலமாக "உரிமையாளர் அற்றது" என வர்ணிக்கப்பட்டு வந்தது.

இந்தச் சட்ட ரீதியான இடைவெளியைப் பயன்படுத்தி, குறித்த பெறுமதியான சொத்தை அரசாங்கம் முறையாகப் பொறுப்பேற்று மக்கள் நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதே மாணவர்களின் பிரதான கோரிக்கையாக இருந்தது.

நேற்று காலை குறித்த பகுதிக்கு பேரணியாகச் சென்ற மாணவர்கள், பொலிஸாரின் வீதித் தடைகளையும் மீறி காணிக்குள் நுழைந்து அதனை ஆக்கிரமிக்கும் நேரடிப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நாட்டின் பல்கலைக்கழகங்கள் தங்குமிட வசதி, இடப்பற்றாக்குறை மற்றும் ஆய்வுக்கூட வசதிகள் இன்றி பாரிய நெருக்கடிகளைச் சந்தித்து வரும் நிலையில், ஊழல் மூலம் ஈட்டப்பட்டதாகக் கருதப்படும் இவ்வாறான பிரமாண்டமான சொத்துக்கள் வீணாகக் கைவிடப்பட்டிருப்பதை ஏற்க முடியாது என மாணவர் பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

குறிப்பாக, ஊழல் மூலம் ஈட்டப்பட்ட சொத்துக்களை மீட்டு மக்களிடம் ஒப்படைப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இதுவரை அத்தகைய சொத்துக்கள் தொடர்பில் எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என மாணவர்கள் குற்றம் சுமத்தினர்.

இந்த மாளிகையை ஒரு கல்வி நிறுவனமாகவோ அல்லது மாணவர் விடுதியாகவோ மாற்றுவதன் மூலம் பல்கலைக்கழக உட்கட்டமைப்பு வசதிக் குறைபாடுகளுக்கு ஒரு தீர்வைப் பெற முடியும் என அவர்கள் வலியுறுத்தினர். (அ)

## கபில சந்தரசேனவின்...

முன்னிலையில் நேற்று இந்த மரணம் தொடர்பான நீதவான் விசாரணை மற்றும் சாட்சிப் பதிவுகள் இடம் பெற்றன.

இதன்போது ஆறு சாட்சியங்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியமளித்தனர்.

முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன, முன்னாள் கிரிக்கெட் வீரர் அரவிந்த டி சில்வாவின் இல்லத்திலேயே உயிரிழந்திருந்தார்.

அந்த இல்லத்தில் சி.சி.ரி.வி. கமெராக்கள் பொருத்தப்பட்டு, அவை இயங்கு நிலையில் இருந்தபோதிலும், நீண்ட காலமாக அதில் காட்சிகள் எவையும் பதிவு செய்யப்படவில்லை என கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் நீதவானுக்குத் தெரிவித்தனர்.

இதனால் மரணம் நிகழ்ந்த இடத்தின் காட்சிகள் எவையும் பொலிஸாருக்கு கிடைக்கவில்லை.

எனினும், உயிரிழந்தவர் தங்கியிருந்த இல்லத்திற்குச் செல்லும் மற்றும் வெளியேறும் வழிகளைக் கொண்ட அயல் வீடுகளின் சி.சி.ரி.வி பதிவுகள் அனைத்தும் பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரி நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

கடந்த மே 12 ஆம் திகதி, நீதிமன்ற அனுமதியுடன் உயிரிழந்தவருக்குச் சொந்தமான மற்றுமொரு இல்லத்தில் பொலிஸார் சோதனை நடத்தினர்.

இதன்போது அங்கிருந்து கைப்பற்றப்பட்ட மடிக்கணினி மற்றும் சில முக்கிய ஆவணங்கள் நேற்றைய வழக்கு விசாரணையின்போது மன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

இவ்வழக்கு தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## திருவள்ளுவர் கலாசார...

நடைபெற்றது.

அமர்வில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்ட நிலையில் யாழ்.திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் தொடர்பில் மத்திய அரசால் உருவாக்கப்பட்ட நம்பிக்கை நிதியம் தொடர்பில் அதிருப்தி வெளியிட்டு முன்மொழிவொன்றை திருமதி யோகேஸ்வரி பிரஸ்தாபித்திருந்தார்.

குறிப்பாக யாழ்ப்பாணம் மாநகரத்தின் இதயப் பகுதியில் மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் இந்திய அரசாங்கத்தின் கொடையாக உருவான "யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம்" தற்போது ஒரு புதிய நிர்வாகக் கட்டமைப்புக்குள் நுழைக்கப்படுகின்றது.

அத்துடன் இதற்காக ஒரு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தையும் (Trust Fund) அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இருப்பினும், இந்த நகர்வின் பின்னணியில் உள்ள சில கசப்பான உண்மைகளை நாம் வெளிப்படுத்தவேண்டியுள்ளது.

குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்கள் என்பவை மக்களின் அடிமட்ட அதிகார அமைப்புகளாகும்.

அதன்பிரகாரம் மாநகர சபைக்குச் சொந்தமான ஒரு காணியில் அமைந்துள்ள ஒரு கலாசார நிலையத்தை நிர்வகிக்கும் முழு உரிமையும் அந்தச் சபைக்கே இருக்க வேண்டும்.

ஆனால், மத்திய அரசின் கலாசார அமைச்சு குறிப்பாக புத்தசாசன அமைச்சு இதன் நிர்வாகத்தை தன்வசம் வைத்திருக்க முற்படுவது, இலங்கையின் அதிகாரப் பரவலாக்கல் கோட்பாட்டுக்கும், உள்ளூராட்சித் தன்னாதிக்கத்திற்கும் முற்றிலும் முரணானது.

அதேநேரம் இந்த பிரமாண்ட நிலையத்தை நிர்வகிக்கத் தேவையான பாரிய நிதி மூலம் மாநகர சபையிடம் இல்லை என்பது கசப்பான யதார்த்தம்.

இந்த நிதிப் பலவீனத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி, "கூட்டு நிர்வாகம்" என்ற போர்வையில் மத்திய அரசு உள்நுழைந்துள்ளது.

நிர்வாகக் குழுவில் மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர். இருப்பினும், முடிவெடுக்கும் அதிகாரம் யாரிடம் உள்ளது?

மத்திய அரசு மற்றும் கலாசார அமைச்சின் சார்பிலான உறுப்பினர்களின் எண்ணிக்கை, மாநகர சபை சார்பான பிரதிநிதிகளை விட அதிகமாக உள்ளது.

இதன் மூலம், மாநகர சபையின் காணியில் அமைந்துள்ள ஒரு சொத்தின் மீதான தீர்மானங்களை, கொழும்பு அதிகாரம் தீர்மானிக்கும் நிலை உருவாகியுள்ளது.

மறுபுறம் தற்போதைய நிதிச் சூழலில் கூட்டு நிர்வாகம் தவிர்க்க முடியாதது என்றாலும், பின்வரும் மாற்றங்கள் அவசியமானவை.

காணியின் உரிமையாளர் என்ற அடிப்படையில், நிர்வாகக் குழுவில் மாநகர சபை சார்பான உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும்.

இந்த மையம் வருமானத்தை ஈட்டக்கூடிய சுயசார்பு நிலையை அடையும்போது, அதன் முழுமையான நிர்வாகத்தை மாநகர சபையிடம் ஒப்படைப்பதற்கான சட்டபூர்வ ஏற்பாடுகள் இப்போதே செய்யப்படவேண்டும்.

இந்த மையத்தின் மூலம் ஈட்டப்படும் வருமானம், மாநகர சபையின் ஒப்புதலுடன், உள்ளூர் மக்களின் கலாசார மேம்பாட்டிற்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

சொத்து எமது மாநகரத்தினுடையது. அதிகாரம் மட்டும் ஏன் அந்நியப்படவேண்டும்? எனவே எமது மாநகரின் சொத்தும் அதிகாரமும் எம்மிடம் இருக்க வேண்டும் என்பதே அவசியம் -என்றார்.

முன்மொழிவின் அவசியம் குறித்து சபையின் உறுப்பினர்கள் தமது ஆதரவை முழுமையாக வழங்கியதுடன் பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றினர். (அ)

## குடிவரவு அதிகாரி...

விசாரணைகளுக்கு அமைவாக இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்று ம் குடியகல்வு திணைக்களத்திற்காக பயனர் மேலாண்மை தொகுதி எனப்படும் மென்பொருளை நிறுவுவதற்காக 9,831,250 ரூபாய் பணம் செலுத்தப்பட்டிருந்தும், அந்த மென்பொருளை நிறுவத் தவறியமை மற்றும் மென்பொருளைப் பெற்றுக்கொள்ளாமல் அரசாங்கப் பணத்தை மோசடியான முறையில் பெற்றுக்கொண்டமை ஆகியவையே இவர் மீது சுமத்தப்பட்டுள்ள பிரதான குற்றச்சாட்டுகளாகும்.

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## யாழில் மின்னல்...

வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## வடக்கில் இன்றும்...

மத்திய வங்காள விரிகுடாவில் உள்ள நன்கமைந்த காற்றழுத்த தாழ்வு நிலை எதிர்பார்த்த வேகத்தில் நகராமல் கடந்த பல மணிநேரங்களாக குறிப்பிட்ட இடத்திலேயே நிலை கொண்டிருப்பதனால் இலங்கையை விட்டு விலகும் என்று எதிர்பார்க்கப்பட்ட மழையுடனான வானிலை அடுத்த 48 மணி நேரத்திற்கு பின்னரே விலகும் வாய்ப்புள்ளது.

இதனால் நேற்றும் இன்றும் இலங்கையின் வடக்கு, மேற்கு, வட மேற்கு, மத்திய, வட மத்திய கிழக்கு மற்றும் மாகாணங்களின் பல பகுதிகளுக்கு மிதமானது முதல் சற்று கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நேற்று கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல் மாவட்டங்களின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக்கனமான மழை கிடைத்தது.

இன்றைய தினமும் வடக்கு, கிழக்கு வடமத்திய மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக கனமானது முதல் மிகக் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாணம் பரவலாக கனமான மழையைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக முல்லைத்தீவு,வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் பல பகுதிகளுக்கும் இன்று கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நாளையும் மேற்கு, வட மேற்கு, வடக்கு, கிழக்கு வடமத்திய மாகாணங்களின் சில பகுதிகளுக்கு மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. குறிப்பாக மேற்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் சற்று கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது-என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## நாட்டில் சீரற்ற...

88 வீடுகள் பகுதியளவும், ஒரு வீடு முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

489 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 310 பேர் 8 பாதுகாப்பு மத்திய நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் மாத்திரம் வெள்ளத்தால் ஆயிரத்து 264 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் ஆயிரத்து 469 பேரும், களுத்துறையில் 529 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## தேசிய மாவீரர்...

இம்முறை நிகழ்வுகளில் ஒரு விசேட மாற்றமாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முப்படைகளுடன் இணைந்து பணியாற்றி உயிர்நீத்த தமிழ் மற்றும் முஸ்லிம் மாவீரர்களின் உறவினர்களுக்கும் ஜனாதிபதியுடன் இணைந்து அஞ்சலி செலுத்துவதற்கு விசேட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பில் உள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன் போது இராணுவ வீரர் சேவைகள் அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற பிரிகேடியர் எஸ்.பி. கொஹோன தெரிவிக்கையில்-

சுமார் 3 தசாப்தங்களாக நிலவிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காக தமது உயிரைத் தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு தேசத்தின் கௌரவத்தைச் செலுத்தும் முகமாக ஆண்டுதோறும் மே 19ஆம் திகதி தேசிய மாவீரர்கள் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. வழக்கம் போலவே இந்த ஆண்டும் மே 19ஆம் திகதி பத்தரமுல்லையில் உள்ள இராணுவ நினைவுத் தூபிக்கு அருகில் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படும். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பங்கேற்புடன் இம்முறை 15ஆவது முறையாக இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இம்முறை நிகழ்வில் சில விசேட மாற்றங்களை மேற்கொண்டுள்ளோம். எமது பிரதான நோக்கம், தாய்நாட்டுக்காக உயிர்நீத்த மாவீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு இந்த நிகழ்வில் அதிக வாய்ப்புகளை வழங்குவதாகும். எனவே, முன்னைய ஆண்டுகளை விட அதிக எண்ணிக்கையிலான குடும்ப உறுப்பினர்களைப் பங்கேற்கச் செய்துள்ளோம்.

மற்றொரு முக்கிய விடயம் என்னவென்றால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து முப்படைகளுடன் இணைந்து யுத்தத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த தமிழ் மற்றும் முஸ்லிம் மாவீரர்களின் உறவினர்களுக்கு இம்முறை விசேட முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சுமார் 30 இற்கும் மேற்பட்ட இத்தகைய குடும்பங்களை விசேடமாகத் தெரிவு செய்து, அவர்கள் ஜனாதிபதியுடன் இணைந்து தமது உறவினர்களுக்கு அஞ்சலி செலுத்தவும் கௌரவம் அளிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# மீண்டும் டொலர் திருட்டு சம்பவம் இடம்பெறாமலிருக்க நடவடிக்கை

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, மே. 15

நிதி அமைச்சிற்குச் சொந்தமான 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மோசடிக்காரர்களின் கைக்குச் சென்ற சம்பவம் தொடர்பாக, மீண்டும் இவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் இருக்க மத்திய வங்கியும் நிதி அமைச்சும் நெருக்கமாகச் செயல்பட்டு வருவதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று மத்திய வங்கியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு நிதி அமைச்சுடன் இணைந்து நெருக்கமாகச் செயல்பட்டு வருகிறோம். இந்த முறையை எவ்வாறு பலப்படுத்தலாம் என்பது குறித்தும், எங்களது அனுபவம் மற்றும் அறிவைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் - என்றார்.

இதன் போது ஊடகவியலாளர் ஒருவர் மத்திய வங்கிக்கு ஏதேனும் ஒரு இடத்தில் குறிக்கீட்டு காசோலை செய்யும் பொறுப்பு வருகிறதா? என்ற கேள்வியை எழுப்பியதை தொடர்ந்து-

இல்லை. ஒரு எளிய உதாரணம் என்னவென்றால், எனது வங்கிக் கணக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட நபரின் கணக்குக்குப் பணம் செலுத்துமாறு வங்கிக்கு நான் உத்தரவிடும்போது, கணக்கு இலக்கம் சரியாக இருந்து, முறைமை ஊடாகப் பணம் செலுத்தப்படுமானால், அதனைச் செய்வது மட்டுமே வங்கியின் வேலையாகும். அதற்கு அப்பால் சென்று அந்த அறிவுறுத்தல்களை மாற்றுவதற்கு வங்கிக்கு உரிமை இல்லை.

வங்கியாளர் என்ற ரீதியில் எமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மாற்றுவதற்கு எமக்கும் உரிமை இல்லை. பணம் செலுத்திய பின்னர் அது நிகழ்ந்துவிடும். அதன் பின்னர் மறுமுனையில் பணம் சென்றடைந்ததா இல்லையா என்பதை அறிக்கை மூலம் பார்ப்பதற்கு எமக்கு வசதி இல்லை. அந்த அறிக்கை அவுஸ்திரேலியாவிலுள்ள சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கே கிடைக்கவேண்டும் என அவர் விளக்கமளித்தார். (அ)

# யோஷிதவின் ஆரம்பகட்ட ஆட்சேபனை நிராகரிப்பு

கொழும்பு, மே. 15

பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியும் என கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாது எனத் தெரிவித்து யோஷித ராஜபக்ஷ தரப்பினால் முன்வைக்கப்பட்ட ஆரம்பகட்ட ஆட்சேபனை மனுவை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உதேஷ் ரணதுங்க நிராகரித்தார்.

பிரதிவாதிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் எவ்வித தடையுமில்லை என நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டினார். இதனைத் தொடர்ந்து, நீதிமன்றில் யோஷித ராஜபக்ஷவுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது. இதன்போது, பதிலளித்த யோஷித ராஜபக்ஷ, தான் குற்றமற்றவர் எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து, குறித்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (அ)

# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பதவிக் காலம் இன்றுடன் நிறைவு

கொழும்பு, மே. 15

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பதவிக் காலம் இன்று நிறைவடையவுள்ளது. புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரை தற்போதைய உறுப்பினர்கள் அப் பதவிகளில் நீடிப்பார்கள் எனத் தெரிவி க்கப்பட்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி லலித் ஏக்கநாயக்க கடமையாற்றினார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர். (அ)

## 35 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம்

# காசோலைகள் வழங்கினார் சிறீபவானந்தராசா எம்.பி.



யாழ்ப்பாணம், மே. 15

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் தெரிவு செய்யப்பட்ட 35 குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டத்துக்கான காசோலைகளை தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீபவானந்தராசா வழங்கினார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது .


மீள்குடியேற்ற வீட்டுத்திட்டத்தின் மூன்றாவது கட்டத்தின் கீழ் 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் திருமணம் செய்துகொண்டு, நீண்ட காலமாக நிரந்தர வீடின்றி வாழ்ந்து வருபவர்களில் தெரிவு செய்யப்பட்ட 35 குடும்பங்களுக்கு தலா 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் முதலாவது கட்டமாக உதவித் தொகையில் 4 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் பாராளுமன்ற உறுப்பினரால் வழங்கப்பட்டது.

இந்த உதவித்திட்டம் வெறும் வீடமைப்பு திட்டமல்ல, போராலும் இடம்பெயர்வாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கை, நம்பிக்கையுடன் கூடிய எதிர்காலம் மற்றும் சமூக மரியாதையை மீட்டெடுக்கும் மனிதநேயப் பயணமாகும்.

எமது அரசாங்கத்தினால் மக்களின் அடிப்படை தேவைகளை முன்னுரிமைப்படுத்தி தொடர்ச்சியான அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீபவானந்தராசா தெரிவித்தார். (அ)

# தமிழரசுக்கட்சி செயற்பாட்டாளர்களால் முள்ளிவாய்க்காலில் கஞ்சி விநியோகம்



முல்லைத்தீவு, மே. 15

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயற்பாட்டாளர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் ஒட்டுசுட்டான் பிரதேச செயற்பாட்டாளர்களில் ஒருவரான இராமலிங்கம் சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், பத்மநாதன் சத்தியலிங்கம் ஆகியோர் பங்கேற்றிருந்ததுடன், பொதுமக்கள் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கல்விளான் மக்களின் காணிகள் வீடுகளைப் பறிக்கப்படக்கூடாது!

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, மே. 15

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, கல்விளான் கிராம மக்கள் பருவப்பெயர்ச்சி மழைக்காலத்தில் வெள்ள அனர்த்தப் பாதிப்புக்குள்ளாகிவருகின்ற நிலையில் அவர்களை மாற்று இடங்களில் குடியேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வாறு கல்விளான் மக்கள் மாற்று இடங்களில் குடியேற்றப்பட்டாலும், அவர்களால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற வீடுகளை அழித்துவிட்டு, காணிகளை அவர்களிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படக்கூடாதென வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் வலியுறுத்தலையடுத்து, கல்விளான் மக்கள் தற்போது பயன்படுத்தும் வீடுகள் அழிக்கப்படாதெனவும், காணிகள் அவர்களிடம் மீளப் பெற்றுக் கொள்ளப்படாதெனவும் துணுக்காய் பிரதேச செயலாளரால் இதன் போது பதிலளிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்து தெரிவிக்கையில்-

பருவப்பெயர்ச்சி மழை காலங்களில் பாலியாறு பெருக்கெடுத்து கல்விளான் பகுதியிலுள்ள குடியிருப்புக்குள் வெள்ள நீர் உட்புகுவதால் அந்தப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் பலத்த பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த வெள்ள அனர்த்தத்தினால் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் பாதிக்கப்படுகின்ற கல்விளான் பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளர்களை வேறு இடங்களில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால் அந்த கல்விளான் பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளர்களை வேறு இடங்களில் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, அந்த மக்கள் ஏற்கனவே குடியிருக்கும் காணிகள் மற்றும் வீடுகளையும் பிரதேச செயலகம் மீளப் பெற்றுக்கொள்ளக்கூடாது. அந்த மக்களே அந்தக் காணிகளையும், வீடுகளையும் தொடர்ந்து பயன்படுத்த இடமளிக்கப்படவேண்டும்.

அங்கு அந்த மக்களால் நடப்பட்ட பலன்தரு நீண்டகாலப் பயிர்களும், அந்த மக்களுக்கான பொருளாதார வளங்களும் உள்ளன. எனவே அந்தக் காணிகளையும், வீடுகளையும் அந்த மக்களே பயன்படுத்திக்கொள்ள இடமளிக்கப்படவேண்டும்-என்றார்.

துணுக்காய் பிரதேச செயலாளர் இதன்போது பதிலளிக்கையில்-

சுற்றறிக்கையின்படி அந்த மக்கள் ஏற்கனவே குடியிருக்கும் காணிகளிலுள்ள வீடுகளில் இடித்தழிப்புச் செய்யப்படவேண்டும். மீண்டும் அந்த மக்கள் அங்கு குடியிருக்க முடியாது.

எனினும் தாங்கள் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக நாம் அவ்வாறு செய்யப்போவதில்லை. எம்மால் அந்த வீடுகளை உடைப்பதற்கான அறிவுறுத்தல் வழங்கப்படாது. அவர்கள் அந்த வீடுகளையும், காணிகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அத்தோடு அந்த மக்களுக்கு புதிதாக வழங்கப்படுகின்ற காணிகளுக்கு பிரதேச செயலகத்தால் எதிர்காலத்தில் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media